சின்னச் சின்னக் குழந்தைகள்
சிரிக்கும் வண்ண முல்லைகள் !
எண்ண எண்ண நெஞ்சிலே
இனிக்கும் நல்ல நூல்களே !

**எங்கள்**

**1986**

## குழந்தைகள் தின வெளியீடுகள்

1. ஆடிப்பாடுவோம்
(பாடல்கள்) — கவிஞர் செல்ல கணபதி

2. தங்கத் தங்கை
(சிறுகதைகள்) — ரேவதி

3. நிலவுக்குப் போவோம்
(அறிவியல்) — சந்தானலக்ஷ்மி


4. பொம்மை மனிதன்
(நாவல்) — வி. நரசிம்மன்

5. இரக்கமுள்ள அரக்கன்
(நாவல்) — சந்தானலக்ஷ்மி


6. திருஞானசம்பந்தர்
(சமயம் வளர்த்த சான்றோர்) — மீனாக்ஷி

7. நன்றியுள்ள நாய்கள்
(பொது அறிவு நூல்) — ஆர். எஸ். மணி

ஏஷியன் அச்சகம், சென்னை - 600 014.



# கடக்கிட்டி முடக்கிட்டி



பெ. தூரன்


விஜயவல்லி மாரிமுத்து

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 600 014 திருச்சி - 620 002
சேலம் - 636 001 கோயமுத்தூர் - 641 001
மதுரை - 625 001 ஈரோடு - 638 001

குழந்தைகள் தின வெளியீடு

# KADAKKITTY MUDAKKITTY


| | | |
|---|---|---|
| Subject | : | **Stories for Children** |
| Author | : | **P. Thooran** |
| Illustrator | : | **Ranu** |
| Publishers | : | **Palaniappa Brothers,**<br>Madras - 600 014, Trichy - 620 002,<br>Salem - 636 001, Coimbatore - 641 001,<br>Madurai - 625 001, Erode - 638 001. |
| Printers | : | **Asian Printers,**<br>Madras - 600 014. |
| Price | : | Rs. 3-90 |
| First Edition | : | 14—11—1976 (Children's Day) |
| Second Edition | : | 28—3—1987 |



# 1

## கடக்கிட்டி முடக்கிட்டி

வயதான கிழவன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் ஏழை. அவனுக்கு உதவி செய்பவர்கள் யாருமே இல்லை. அதனால் அவன் தானே பாடுபட்டுப் பணம் சம்பாதித்தால்தான் பிழைக்க முடியும்.

அவன் ஒரு அடர்ந்த காட்டுக்குப் பக்கத்தில் சிறிய குடிசை ஒன்று போட்டுக்கொண்டான். அந்தக் காட்டில் நாள்தோறும் விறகு ஒடித்து வருவான். பிறகு அதைச் சுமையாகக் கட்டுவான். பக்கத்தில் இருந்த ஒரு பட்டணத்தில் அதை விற்று, அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு வயிறு வளர்த்து வந்தான்.

ஆனால், விறகுச் சுமையைத் தலையில் வைத்துக் கிழவனால் சுமந்து செல்ல முடியுமா? அதற்காக அவன் ஒரு கழுதையை வளர்த்து வந்தான். அந்தக் கழுதையின்மேல் விறகுக் கட்டை வைத்துப் பட்டணத்திற்கு ஓட்டிச் செல்லுவான். விறகு விற்று வரும் பணத்தைக் கொண்டு சமையலுக்கு வேண்டிய அரிசி பருப்பு முதலியவற்றை வாங்கி வருவான். இப்படி அவன் வாழ்நாள் கழிந்துகொண்டிருந்தது.

இளம் வயதிலிருந்தே அந்தக் கழுதை விறகைச் சுமந்து சென்றதால் அதன் பின்கால்கள் இரண்டும் கொஞ்சம் கொஞ்சமாக உள் பக்கம் வளைந்துவிட்டன. அதனால் அந்தக் கழுதை நடக்கும்போது பின்கால்கள் ஒன்றோடொன்று இடித்துக்கொள்ளும். அப்படி இடித்துக்கொள்ளும்போது "கடக்கிட்டி முடக்கிட்டி, கடக்கிட்டி முடக்கிட்டி" என்று சத்தம் கேட்கும். கழுதை விரைவாக ஓடும்போது இந்தச் சத்தம் மேலும் அதிகமாகக் கேட்கும். அதனால் அந்தக் கழுதைக்குக் கிழவன் 'கடக்கிட்டி முடக்கிட்டி' என்றே செல்லமாகப் பெயர் வைத்துவிட்டான்.

பட்டணத்திலிருந்து மாலை நேரத்தில் திரும்பிய பிறகு கிழவன் சமையல் செய்யத் தொடங்குவான். அதற்காக அரிசியையும் பருப்பையும் தண்ணீரில் தனித்தனியாகப் போட்டு அரித்து உலையில் இடுவான். அப்படிச் செய்வதால் கிடைக்கும் கழுநீரைத் தன் கழுதைக்கு வைப்பான். கழுதையும் ஆவலோடு

அதைக் குடித்துவிட்டுக் குடிசைக்குப் பக்கமாக வெளியே புல் மேயச் செல்லும். நன்றாக இருட்டும்வரையில் அது மேய்ந்துவிட்டுக் குடிசைக்கு வந்துவிடும்.

குடிசைக்குப் பக்கத்தில் உள்ள காட்டிலே புலிகள் இருந்தன. அவற்றால் இந்தக் கழுதைக்கு ஏதாவது தீங்கு நேராமல் இருப்பதற்காகக் கிழவன் ஒரு தந்திரம் செய்தான். நல்ல செம்மண்ணாகப் பார்த்துக் கொண்டு வந்து தண்ணீரில் கரைத்தான். அதைக் கழுதையின் கால்களை விட்டுவிட்டு உடம்பு முழுவதும் நன்றாகப் பூசினான். பச்சைத் தழையைக் கசக்கிக் கழுதையின் கால்களுக்கும் முகத்திற்கும் பசேலென்று சாயம் தீட்டினான். இவ்வாறு செய்த பிறகு பார்த்தால் கழுதையின் உருவமே அடையாளம் தெரியாமல் மாறி விட்டது. ஏதோ ஒரு விநோதமான விலங்கு போல் அது காட்சி அளித்தது. சாயம் கொஞ்சம் மங்கும்போது மறுபடியும் அடித்து விடுவான்.

இவ்வாறு செய்தபிறகுதான் பயமில்லாமல் கழுதையைமேயவிட்டான். இருந்தாலும் கழுதை காட்டிற்குள் அதிகத்தூரம் செல்லாமலும், அதிக நேரம் இருட்டிலே வெளியில் இராமல் குடிசைக்கு வருமாறும் அவன் பழக்கி இருந்தான்.

இவ்வாறு கழுதைக்கு எவ்விதத் தீங்கும் வராமல் காலம் ஓடிக்கொண்டிருந்தது. ஒருநாள்

கழுதைக்குக் காட்டிற்குள்ளே கொஞ்சம் நுழைந்தால் பசும்புல் நிறையக் கிடைக்கும் என்று தோன்றியது. விரைவில் குடிசைக்குத் திரும்பிவிடலாம் என்று எண்ணிக்கொண்டு காட்டில் உள்ளே புகுந்து மேயத் தொடங்கிற்று. உள்ளே போகப்போகப் பசும்புல் நிறைய வளர்ந் திருப்பதைப் பார்த்து, அதை மேய வேண்டும் என்ற ஆசையால் அது அதிகத் தூரம் சென்று விட்டது. திடீரென்று சூரியன் மறைந்து நன்றாக இருட்டும் கட்டத் தொடங்கிவிட்டது.

அந்த வேளையிலே ஒரு புலி எதிரே வந்தது. புல்லை மேயவேண்டும் என்ற பேராசையால் உயிருக்கே ஆபத்து வரும் போலிருந்தது. இருந்தாலும் நடந்து போனதை எண்ணி வருத்தப்படுவதில் பயனில்லை என்று அதற்குப் பட்டது. அதனால் கடக்கிட்டி முடக் கிட்டி தைரியத்தை இழக்காமல் புலியிடமிருந்து தப்பவேண்டும் என்று எண்ணமிட்டுக்கொண் டிருந்தது.

புலி பலமுள்ளதாக இருந்தாலும் இயற்கை யாகவே சந்தேகமுள்ள மிருகம். இந்தச் சந்தேகமும் கடக்கிட்டி முடக்கிட்டிக்கு உதவி யாக அமைந்தது.

எதிரே வந்த புலி கடக்கிட்டி முடக்கிட்டி யின்மேல் உடனே பாய்ந்து கொல்ல முயற்சி செய்யவில்லை. 'நான் பார்த்துள்ள விலங்குகள் போல் இது இல்லையே! இது ஏதோ புது

மாதிரியான விலங்குபோல் இருக்கிறதே! இதன் பெயர் என்னவாக இருக்கும்? இதன் மேல் பாய்ந்தால் ஒருவேளை ஆபத்தாக முடியுமோ?' என்று புலி யோசித்தது. எதற்கும் அருகே சென்று பேசிப் பார்ப்போம் என்று அது மெதுவாக நகர்ந்து வந்தது. சிவப்புச் சாயமும் பச்சைச் சாயமும் கடக்கிட்டி முடக்கிட்டியைப் புதியதோர் விலங்காகச் செய்திருந்தன. சற்று அருகில் வந்ததும், "உன் பெயர் என்ன?" என்று புலி தயக்கத்தோடு கழுதையிடம் கேட்டது.

"கடக்கிட்டி முடக்கிட்டி" என்று தைரியமாகக் கழுதை பதில் சொல்லிற்று.

பெயரைக் கேட்டதும் புலிக்கு மேலும் சந்தேகம் வந்துவிட்டது. 'இந்த மாதிரிப் பெயரை நான் கேட்டதே இல்லையே! மான், மாடு என்று இவ்வாறு பல மிருகங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். கடக்கிட்டி முடக்கிட்டி என்று கேள்விப்பட்டதே இல்லையே! இருந்தாலும் நன்கு விசாரிப்போம்' என்று புலி தனக்குள் தீர்மானம் செய்தது.

"உனக்கு அண்ணன் தம்பிகள் உண்டா?"

"இரண்டு பேர் அண்ணன் உண்டு. மூத்தவன் 'சடக்கிட்டி முடக்கிட்டி'; இரண்டாவது அண்ணன் பெயர் 'மடக்கிட்டி முடக்கிட்டி'. எனக்குத் தம்பி இல்லை" என்று கடக்கிட்டி முடக்கிட்டி பதில் சொல்லிற்று.

இந்தப் பெயர்களைக் கேட்டதும் புலிக்கு மேலும் சந்தேகம் அதிகமாகிவிட்டது. "பெயரெல்லாம் விநோதமாக இருக்கிறதே!" என்று தாழ்ந்த குரலில் புலி கேட்டது.

"ஆமாம், மூத்த அண்ணன் புலியின் கழுத்தைச் 'சடக்'கென்று கடித்துக் கொல்வான். அதனால் அவன் சடக்கிட்டி முடக்கிட்டி. இரண்டாவது அண்ணன், புலியின் முதுகு எலும்பை 'மடக்' என்று கடிப்பான். அதனால் அவன் பெயர் மடக்கிட்டி முடக்கிட்டி. நான் 'கடக்' என்று கடிப்பேன். அதனால் நான் கடக்கிட்டி முடக்கிட்டி" என்றது கழுதை.

"அது சரி. எல்லோருக்குமே முடக்கிட்டி என்று பொதுவாக எப்படிப் பெயர் வந்தது?"

"அதுவா? அது எங்கள் அருமையான பட்டப்பெயர்" என்று கழுதை தலையை நிமிர்த்திக்கொண்டு சொல்லிற்று.

"யார் அப்படிப் பட்டம் கொடுத்தார்கள்?"

"நம் சிங்க ராஜாதான் கொடுத்தார். வேறு யார் கொடுப்பார்கள்?"


"எதற்காக அப்படிப் பட்டம் கொடுத்தார்?"

"எல்லாம் எங்கள் வீரச்செயலைப்பற்றி அறிந்துதான் கொடுத்தார். மூத்த அண்ணன் நூறு புலிகளைச் 'சடக்' என்று கடித்துக் கொன்றார். சின்ன அண்ணன் இருநூறு புலிகளை 'மடக்' என்று கடித்தெறிந்தார். நான் அவர்

களையெல்லாம் மீற வேண்டுமென்று இதுவரை இருநூற்றுத் தொண்ணூற்று ஒன்பது புலிகளை 'கடக்' என்று கடித்துக் கொன்றிருக்கிறேன். இன்னும் முந்நூறு ஆகவில்லை. நல்ல வேளை, இப்பொழுது நீ வந்து அகப்பட்டிருக்கிறாய். உன்னையும் 'கடக்' என்று கடித்துக் கொன்று விட்டால் சரியாக முந்நூறு ஆகிவிடும்'' என்று கடக்கிட்டி முடக்கிட்டி தனது வாயைத் திறந்து பல்லைக் காட்டிற்று.

புலி பயந்து ஓடியே போய்விட்டது. கழுதையின் பல்லையெல்லாம் பார்க்க அது நிற்கவே இல்லை. தப்பினால் போதும் என்று ஓடிவிட்டது.

'பசும் புல்லின் மேலிருந்த பேராசையால் உயிருக்கே ஆபத்து வந்துவிடும்போலிருந்தது. நல்ல வேளை, தைரியத்தை இழக்காமல் அறிவைப் பயன்படுத்தித் தப்பினேன். இனி மேல் இவ்வளவு தூரம் வரவே மாட்டேன்' என்று எண்ணிக்கொண்டே கிழவனுடைய குடிசையை நோக்கி வேகமாகக் கழுதை நடந்தது. அப்பொழுது பின்கால்கள் 'கடக்கிட்டி முடக்கிட்டி, கடக்கிட்டி முடக்கிட்டி' என்று சத்தம் செய்வதைக் கேட்க வேண்டுமே!



# 2

## கடக்கிட்டி முடக்கிட்டியும் பட்டணத்துக் குதிரையும்

அந்தக் குதிரையினால்தான் ஒருகுடும்பமே பத்து ஆண்டுகளுக்குமேல் பிழைத்து வந்தது. ஆனால், இப்போது அது கிழடாகிவிட்டது. இனிமேல் அதை வண்டியில் பூட்டி ஓட்ட முடியாது. அதனால் ஜட்காக்காரன் கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் அதைத் தன் வீட்டை விட்டு விரட்டி அடித்துவிட்டான்.

பாவம், அந்தக் கிழட்டுக்குதிரை கண்ணீர் விட்டுக்கொண்டே நடந்தது. சாலை ஓரங்களில் முளைத்திருந்த புல்லை மேய்ந்தவாறே மெல்ல மெல்ல அடி எடுத்து வைத்தது. அப்படியே

அது பட்டணத்தை விட்டு அதன் அருகில் உள்ள காட்டிற்கு வந்து சேர்ந்தது. அங்குதான் அது கடக்கிட்டி முடக்கிட்டியை மாலை வேளையில் சந்தித்தது.

விறகு சுமந்து பட்டணத்திற்குச் சென்று அப்பொழுதுதான் கடக்கிட்டி முடக்கிட்டி திரும்பி வந்திருந்தது. வழக்கம்போல் கழு நீரைக் குடித்தவுடன் அது குடிசையை விட்டு வெளியே புல் மேய வந்தது. வந்த இடத்திலே அது அந்தக் கிழட்டுக் குதிரையைச் சந்தித்தது. தனக்கு ஒரு நல்ல பேச்சுத் துணை கிடைத்தது என்று அதற்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டா யிற்று. அதனால் அது கிழட்டுக் குதிரையிடம் மிகுந்த அன்பாக நடந்துகொண்டது. குதிரையும், இப்படி விநோதமாகச் சாயம் பூசிய கழுதையைப் பார்த்ததே இல்லை. அதனால் அதற்கும் கடக்கிட்டி முடக்கிட்டியிடம் அன்பு பிறந்தது.

இரண்டும் உல்லாசமாகப் பேசிக்கொண்டே காட்டில் புகுந்து புல் மேயத் தொடங்கின. கடக்கிட்டி முடக்கிட்டிக்கு ஒரு நல்ல நண்பன் கிடைத்த மகிழ்ச்சியால், அது காட்டிற்குள் அதிக தூரம் போகக் கூடாது என்பதை அடியோடு மறந்துவிட்டது.

குதிரையும் பல நாள் நல்ல பச்சைப் புல்லைக் காணாமல் வயிறு வாடிக் கிடந்தது. அதனால் அதுவும் உற்சாகமாகக் காட்டில் புகுந்து மேயலாயிற்று. பசும்புல்லை நிறையத்

தின்றதால் அதன் உடம்பில் ஒரு புதிய தெம்பு கூட வந்துவிட்டது.

இப்படிக் கழுதையும் குதிரையும் காட்டில் புகுந்து இருட்டு நேரம் வருவதைக்கூட நினைக்காமல் பேசிக்கொண்டே மேய்ந்தன. அந்தச் சமயத்தில் ஒரு புலி அங்கு வந்தது. அது, முன்னால் கடக்கிட்டி முடக்கிட்டி விரட்டி அடித்த புலி அல்ல. இது வேறு ஒரு புலி. ஆனால், புலிகளுக்கெல்லாம் இயல்பாக இருக்கும் சந்தேகம் அந்தப் புலிக்கும் இருந்தது.

அந்தப் புலி, குதிரையையும் பார்த்ததில்லை; கழுதையையும் பார்த்ததில்லை. பச்சை சிவப்பு வர்ணம் கொண்ட ஒரு விலங்கை அது பார்த்ததே கிடையாது. கிழவன் அன்று காலையில்தான் புதிதாகச் சாயம் பூசி இருந்தான்.

அதனால் புலிக்குப் பெரிய சந்தேகம் வந்துவிட்டது. 'இந்த விலங்குகள் தன்னை விடப் பலமுள்ளவைகளாக இருந்தால் என்ன செய்வது? பலமுள்ளவையாக இல்லாவிட்டால் இப்படிப் பயமின்றிக் காட்டில் பேசிக்கொண்டே இருக்குமா? இவற்றின்மேல் பாய்ந்தால் தன் உயிருக்கே ஆபத்து வந்துவிடுமோ?' என்று இவ்வாறு மனத்தைக் குழப்பிக்கொண்டே பதுங்கிப் பதுங்கி வந்தது.

அந்தச் சமயத்தில் கடக்கிட்டி முடக்கிட்டி புலியைப் பார்த்துவிட்டது. 'புதிய நண்பன் கிடைத்த மகிழ்ச்சியால் காட்டிற்குள் அதிகத்

தூரம் போகக்கூடாது என்பதை மறந்துவிட்டேனே!' என்று கொஞ்சம் கலக்கமடைந்தது. இருந்தாலும், அந்தப் புலியிடமிருந்து எப்படியாவது தப்ப வேண்டும் என்று ஒரு தந்திரம் செய்தது.

உடனே அது குதிரையின் காதில் மெதுவாகச் சொல்லிற்று: "இந்தப் புலியிடமிருந்து உயிர் தப்ப இதுதான் நல்ல வழி. நீ கீழே படுத்துக்கொள். நான் உன் முதுகிலே ஏறிக் கொள்கிறேன். உடனே நீ எழுந்து புலியை நோக்கி முன்னாலே பாய்ந்து செல். அதற்குப் பிறகு மற்றவற்றையெல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று குதிரையிடம் தன் தந்திரத்தை எடுத்துக் கூறிற்று.

குதிரைக்கு ஒரே பயம். அதன் கால்கள் எல்லாம் நடுங்க ஆரம்பித்தன. இருந்தாலும், கழுதையின் பேச்சைக் கேட்காமல் புலியிடமிருந்து உயிர் தப்பமுடியாது என்று எண்ணிக் கீழே படுத்தது. கடக்கிட்டி முடக்கிட்டி அதன் முதுகின் மேல் ஏறிக்கொண்டது.

உடனே குதிரை எழுந்து புலியை நோக்கி வேகமாக முன்னால் பாய்ந்தது. "ஆஹா! நல்ல வேட்டை கிடைத்தது. புலியைத் தின்று பல நாளாயிற்று. இந்தப் புலி இப்போது எனக்குக் கிடைத்தது" என்று கடக்கிட்டி முடக்கிட்டி உரத்த குரலில் கூறிற்று. குதிரையோ முன்னால் பாய்ந்து பாய்ந்து வந்தது. அதனால் புலி பயந்துவிட்டது.

கழுதையின் பெரிய சத்தத்தையும் கேட்கவே புலி, 'தப்பினோம், பிழைத்தோம்' என்று ஓடியே போயிற்று.

இந்தப் புலிக்கு ஒரு குள்ளநரி மந்திரியாக இருந்தது. அது குதிரையையும் கழுதையையும் பல தடவை பார்த்திருக்கிறது. அதனால் அது பயந்தோடி வந்த புலியைப் பார்த்து ஏளன மாகச் சிரித்தது. சிரித்துவிட்டு அது, "ஒரு கிழட்டுக் குதிரைக்கும், கழுதைக்கும் பயப்படு கின்ற புலியை நான் பார்த்ததே இல்லை. இப்படி ஒரு கோழையான புலிக்கு மந்திரியாக இருப்பது எனக்கே பெரிய அவமானம்" என்றது.

"எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. சுலப மாக அவற்றைக் கொல்ல முடியும் என்றால் என் மேலே பாய்வது போல அவை வேகமாக வருமா ?" என்று கேட்டது புலி.

"புலியாரே, உங்களால் ஒரே அடியில் அவை இரண்டையும் அடித்துக் கொல்ல முடியும். சந்தேகமே வேண்டாம். உடனே புறப்படுங்கள்" என்று குள்ளநரி தைரியம் சொன்னது.

"நீ என்னை அந்த விலங்குகளிடம் சிக்க வைக்கப் பார்க்கிறாய். நான் போக மாட்டேன்" என்று புலி சந்தேகத்தோடு உருமிற்று.

"என்மேல் உங்களுக்குச் சந்தேகமா ? வேண்டுமானால் என்னுடைய வாலையும் உங்க ளுடைய வாலையும் கெட்டியாக முடிந்துகொள்

வோம். அப்பொழுது உங்களுக்கு ஆபத்து வந்தால் எனக்கும் வரும் அல்லவா? உங்களுக்கு வஞ்சனை செய்ய மாட்டேன். நான் வேண்டுமானாலும் முன்னாலே செல்லுகிறேன்'' என்று குள்ளநரி உறுதி கூறிற்று. குள்ளநரிக்கு நல்ல பசி; அந்த இரண்டு விலங்குகளையும் விட்டுவிட மனம் வரவில்லை.

''சரி, அப்படியே வாலை முடிந்துகொள்வோம். நீதான் முன்னால் செல்ல வேண்டும்'' என்று புலி தயக்கத்தோடு பதில் அளித்தது.

குள்ளநரி சொன்னவாறே இரண்டும் தங்கள் வாலை நன்றாக முடிந்துகொண்டன. பிறகு குள்ளநரி முன்னால் நடந்தது.

கடக்கிட்டி முடக்கிட்டி இவற்றைக் கண்டதும் மறுபடியும் குதிரையின்மேல் ஒய்யாரமாக ஏறிக்கொண்டு உரத்த குரலில் பேசத் தொடங்கிற்று:


''நரி மாமா, அந்தப் புலியை உன் வாலில் கட்டி இழுத்துக்கொண்டு வர இவ்வளவு நேரமா? எனக்குப் பசி தாங்க முடியவில்லை. இழுத்து வா அந்தப் புலியை'' என்று அது அதட்டும் குரலில் கூறிற்று. குதிரையும் முன்னால் பாய்ந்தது.

குள்ளநரி தன்னை வஞ்சகமாக ஏமாற்றி விட்டதாக நினைத்துப் புலி, உடனே காட்டுக்குள் ஓடத் தொடங்கிற்று. பாவம், குள்ளநரியின் வால் கெட்டியாகப் புலியின் வாலோடு முடியப்பட்டிருந்ததால் அது தரையிலும்

மரங்களிலும் பாறைகளிலும் அடிபட்டுக் கொண்டே சென்றது. குள்ளநரி எவ்வளவு சொன்னாலும் புலி கேட்பதாக இல்லை. அது தாவித்தாவிச் சென்றது. புலி அந்தக் காட்டை விட்டு வெகு தூரம் ஓடிய பிறகுதான் சற்று இளைப்பாற நின்று பார்த்தது. இதற்குள் தலையிலும் உடம்பிலும் அடிபட்டுக் குள்ளநரி இறந்து போயிற்று.

கிழட்டுக் குதிரையும் கடக்கிட்டி முடக்கிட்டியும் தந்திரத்தால் உயிர் தப்பின. என்றாலும், குதிரைக்குக் காட்டுப்பக்கத்தில் வாழவே பிடிக்கவில்லை.

''எங்கள் பட்டணமே நல்லது. அங்கு புலியெல்லாம் கிடையாது. அங்கே வசிப்பதைப் போல வேறு எங்கும் சுகமாக வசிக்க முடியாது. நான் அங்கேயே போகிறேன்'' என்று சொல்லிவிட்டு வந்த வழியிலேயே நடக்கத் தொடங்கிற்று. கடக்கிட்டி முடக்கிட்டி எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அது கேட்கவில்லை. ''காட்டில் மின்சார விளக்கே இல்லை. எல்லாம் ஒரே இருட்டு, கார் சத்தத்தைக்கூடக் கேட்க முடியவில்லை. இங்கு என்னால் ஒரு நொடியும் வாழ முடியாது'' என்று சொல்லிவிட்டுக் குதிரை புறப்பட்டுவிட்டது.



# 3

## கடக்கிட்டி முடக்கிட்டி பட்டணம் பார்த்தல்

அந்தக் கிழட்டுக் குதிரை பட்டணத்தைப் பற்றிப் புகழ்ந்து சொன்னதெல்லாம் கடக்கிட்டி முடக்கிட்டியின் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. அதனால் எப்படியாவது பட்டணத்தைச் சுற்றிப் பார்க்கவேண்டுமென்ற ஆசை அதற்கு உண்டாயிற்று. பட்டண வாழ்வுதான் உயர்ந்தது என்று குதிரை சொன்னதும் அதன் மனத்தை விட்டு நீங்கவே இல்லை. அதையும் பார்த்துவிடலாம் என்பது அதன் எண்ணம். பட்டண வாழ்வு நன்றாக இருந்தால் கிழவனை விட்டு அங்கேயே இருந்துவிடலாமல்லவா ?

கிழவன் விறகுச் சுமையைப் பட்டணத்திலே விற்றுவிட்டு மாலை நான்கு மணி வரையும் இளைப்பாறுவான் ; நன்றாகத் தூங்கவும் செய்வான். பட்டணத்திலே ஓர் ஒதுக்கிடத்திலே இருந்த ஒரு பாழடைந்த சத்திரம் இதற்கு வசதியாக இருந்தது. அங்குதான் அவன் நாள்தோறும் சென்று ஓய்வெடுப்பது வழக்கம். அங்கு வந்ததும், விறகுச் சுமையோடு அவன் கழுதை மேல் ஏற்றி வந்திருந்த பசும் புல்லை எடுத்து அதற்குப் போடுவான். பிறகு, மேல் வேட்டியை விரித்துச் சத்திரத்தில் படுப்பான். கழுதையை அவன் கட்டி வைப்பதில்லை. ஏனென்றால், அதுவும் புல்லைத் தின்றுவிட்டு அங்கேயே தரையில் படுத்துக் கொள்ளும். எங்கும் ஓடிவிடாது என்று அவனுக்குத் தெரியும்.

மாலை நான்கு மணிக்குக் கிழவன் எழுந்தவுடன் ஒரு மண் கலயத்திலே கொண்டு வந்திருந்த பழைய சோற்றை உண்பான். கழுதைக்கும் கொஞ்சம் வைப்பான். இந்தப் பழைய சோற்றுக்காகவும் அது அங்கேயே காத்துக் கிடக்கும்.

கிழட்டுக் குதிரை வந்த போனதிலிருந்து கடக்கிட்டி முடக்கிட்டியின் மனத்தில் பட்டணத்தைச் சுற்றிப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் வளர்ந்துகொண்டே இருந்தது. மேலும், அந்தக் குதிரையை எங்காவது சந்திக்கலாம் என்ற நோக்கமும் அதற்கு உண்டாயிற்று.

அதனால் குதிரை வந்துபோனபத்து நாள்களுக்குப் பிறகு ஒரு நாள் கடக்கிட்டி முடக்கிட்டி தனது ஆசையை நிறைவேற்றிக்கொள்ளத் தீர்மானித்தது. வழக்கம்போலக் கிழவன் அன்றும் விறகை விற்றுவிட்டுச் சத்திரத்தில் வந்து படுத்துத் தூங்கலானான்.

அந்தச் சமயம் பார்த்துக் கடக்கிட்டி முடக்கிட்டி கிழவன் போட்ட பச்சைப் புல்லை வேகமாகத் தின்றுவிட்டுப் பட்டணம் பார்க்கப் புறப்பட்டது. கிழவன் பழைய சோறு தனக்குப் போடும் நேரத்திற்குள் சத்திரத்திற்கு வந்துவிட வேண்டும் என்று அது ஓட்டமும் நடையுமாகப் பல வீதிகளில் சென்றது.

ஒரு வீதியிலே அந்த கிழக்குதிரை சுவரில் ஒட்டியிருந்த சுவரொட்டிக் காகிதத்தை வாயினாலேயே கடித்துக் கிழித்து எடுத்துத் தின்றுகொண்டிருப்பதைக் கடக்கிட்டி முடக்கிட்டி பார்த்து, மிகுந்த மகிழ்ச்சியோடு அதன் அருகே சென்றது.

"அண்ணே, சுகமா வந்து சேர்ந்தியா ?" என்று அது குதிரையைப் பார்த்துக் கேட்டது.

"வா, தம்பி. எப்படியோ மெல்ல மெல்லப் பட்டணமே வந்து சேர்ந்துவிட்டேன். காட்டிலே அந்தப் புலியைப் பார்த்தபோது என் உடம்பு அப்படியே நடுங்கிப் போயிற்று. நல்ல வேளை, நீ காப்பாற்றினாய். ஆனால், மறுபடியும் புலி வந்துவிடுமோ என்ற பயத்

தினால் உனக்கு நன்றிகூடச் சொல்லாமல் அவசரமாக வந்துவிட்டேன்,'' என்றது குதிரை.

''அதைப்பற்றி இப்பொழுது பேசவேண்டாம், அண்ணே. நான் பட்டணம் பார்க்க வேண்டும்'' என்றது கழுதை.

''முதலில் நான் தின்னும் காகிதத்தை ருசி பார். பிறகு பட்டணம் பார்க்கலாம்'' என்று குதிரை பெருமையாகத் தன் தீனியைப் பற்றிப் பேசிற்று. இந்த உணவு, காட்டில் கிடைக்குமா ?

''எனக்குக் காகிதம் தின்று பழக்கமில்லை. பச்சைப்புல்தான் பிடிக்கும். இருந்தாலும் நீ ஆசையாகக் கொடுப்பதை வேண்டாம் என்று சொல்லலாமா ?'' என்று கூறிவிட்டுக் கடக்கிட்டி முடக்கிட்டி சுவரொட்டிக் காகிதத்தை வாயில் வைத்தது.

ஏதோ ஒரு நாற்றமெடுத்த பசையை அதில் தடவிச் சுவரில் ஒட்டியிருந்தார்கள். கடக்கிட்டி முடக்கிட்டிக்கு அது கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஒரே குமட்டலாக வந்தது. ''அண்ணே, இதுதானா உங்கள் பட்டணத்து விருந்து ?'' என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு அது கேட்டது.

அந்தச் சமயத்தில் சுவரொட்டி ஒட்டுகின்ற சிறுவர்கள் மூன்று பேர் அங்கு வந்து சேர்ந்தார்கள். ''இந்தக் கிழட்டுக்குதிரை நாம் ஒட்டுவதையெல்லாம் தின்றுவிடுகிறது. இதைக்

கல்லெடுத்து விரட்டுங்கடா'' என்றான் ஒரு சிறுவன்.

பிறகு சொல்லவா வேண்டும்? ஆளுக்கு ஒரு கல்லைத் தூக்கி வீசினார்கள். கிழக் குதிரை கல்லடிக்குத் தப்புவதற்காகத் தெரு வின் குறுக்கே ஓடப் பார்த்தது. எதிர்பாராத விதமாகக் குறுக்கே அது ஓடியதால் வேகமாக வந்த பஸ் ஒன்று அதன்மேல் மோதிவிட்டது. குதிரை தடால் என்று கீழே விழுந்தது மிகவும் மெலிந்து கிடந்த அந்தக் கிழட்டுக் குதிரையால் அந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. அதன் வாயிலிருந்து ரத்தம் வழிந்தது.கொஞ்ச நேரத்தில் அதன் உயிர் பிரிந்தது.

''இதுதானா உங்கள் பட்டணத்து வாழ்க்கை? மோட்டார் வண்டிச் சத்தம் காட்டில் கேட்கவில்லையே என்று இங்கு வந்தாய். அந்த மோட்டாரே உனக்கு எமனாக வந்துவிட்டது'' என்று கண்ணீர் வடித்துக்கொண்டே கடக் கிட்டி முடக்கிட்டி சத்திரத்தை நோக்கி எச்சரிக்கையோடு நடந்தது. பட்டணம் பார்த் தது போதும் என்றாகிவிட்டது அதற்கு. அது சத்திரத்தை அடைவதற்கும் கிழவன் விழிப்ப தற்கும் சரியாக இருந்தது.



# 4

## கடக்கிட்டி முடக்கிட்டியும் சர்க்கசும்

ஒரு நாள் விறகை விற்றுவிட்டுக் கிழவன் வழக்கம்போல் சத்திரத்திற்கு வந்து படுத்துத் தூங்கலானான்.

கடக்கிட்டி முடக்கிட்டி பச்சைப் புல்லைத் தின்றுவிட்டுக் கொஞ்சம் படுத்திருந்தது. ஆனால், அதிக நேரம் அப்படிப் படுத்திருப்பது அன்று ஏனோ அதற்குப் பிடிக்கவில்லை. அது எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தது.

கிழவன் தூங்கி எழுவதற்கு முன்னால் என்ன செய்யலாம் என்று அது யோசனை

செய்தது. பட்டணம் பார்க்கும் ஆசையெல் லாம் இப்பொழுது அதற்கு இல்லை.

அந்தச் சமயத்திலே பக்கத்திலே பாண்டு வாத்தியம் திடீரென்று முழங்க ஆரம்பித்தது. புதிதாக ஒரு பெரிய டேரா போட்டிருப்பதை யும் அது பார்த்து ஆச்சரியமடைந்தது. டேரா உயரமாக இருந்ததால் சத்திரத்திலிருந்தே நன்றாகத் தெரிந்தது. அங்கு என்னதான் நடக் கிறது என்பதை எட்டிப் பார்த்துவிட்டு வந்து விடலாம் என்று கடக்கிட்டி முடக்கிட்டி புறப் பட்டது.

டேராவுக்கு முன்னால் பாண்டு வாத்தியக் காரர்கள் உற்சாகமாகக் கடலலைகளின் சத்தம் தோற்றுப்போகும்படி தங்கள் வாத்தி யங்களை வாசித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு பக்கத்தில் எத்தனையோ குதிரைகள், யானை கள், குரங்குகள், நாய்கள் எல்லாம் தயாராக நின்றுகொண்டிருந்தன. சிங்கம், புலி முதலிய விலங்குகளும் கூண்டில் தனித்தனியாக அடைக்கப்பட்டிருந்தன.

அது ஒரு பெரிய சர்க்கஸ் கம்பெனி என்று கடக்கிட்டி முடக்கிட்டி தெரிந்துகொண்டது. அன்று ஞாயிற்றுக்கிழமை ஆகையால் மூன்று மணிக்கே முதல் காட்சியைத் தொடங்கினார் கள். சிறுவர்களும் சிறுமிகளும் ஆவலோடு வந்து கூடிக்கொண்டிருந்தார்கள்.

அத்தனை விலங்குகளும் என்னதான் செய் யப்போகின்றன என்று பார்த்துவிடவேண்டும்

என்று கடக்கிட்டி முடக்கிட்டிக்கு ஆசை உண்டாயிற்று. அதனால் அது மெதுவாகக் குதிரைகளுக்கும் யானைகளுக்கும் மத்தியில், யார் கண்ணிலும் படாமல் போய்ச் சேர்ந்துகொண்டது. டேராவுக்குள் நுழைய இனிமேல் தடை எதுவும் இராது என்று எண்ணி, அது நிம்மதியாகப் பெருமூச்சு விட்டது.

ஆனால், சர்க்கஸ் மிருகங்களெல்லாம் கடக்கிட்டி முடக்கிட்டியைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தன.

''உன்னால் எங்களைப் போல வட்ட வடிவமான அரங்கில் ஓடவும் வித்தைகள் செய்யவும் தெரியுமா? கழுதையே, உனக்கு இங்கு என்ன வேலை?'' என்று குதிரைகள் அலட்சியமாகக் கனைத்தன.

''கழுதைப்பயலே, என்னைப் போல மரப் பந்தின்மேல் நான்கு கால்களையும் வைத்து அதை உருட்ட முடியுமா?'' என்று கேட்பது போல் யானை உரத்த குரலில் சத்தம் செய்தது.

''ஏய் கழுதையே. நாய் வண்டியில் சவாரி போகத் தெரியுமா ? ஒன்றும் உதவாத கழுதைக்கு இங்கு என்ன வேலை?'' என்று குரங்கு 'உர் உர்' என்று சீறிற்று.

இப்படியே எல்லா விலங்குகளும் கடக்கிட்டி முடக்கிட்டியைக் கேலி செய்தன. ஆனால், அது பொறுமையாக இருந்து, தந்திரமாக டேராவுக்குள் நுழைந்துவிட்டது குதிரை

களுக்கு மத்தியில் அது மறைந்து நின்றதால் அதைக் கண்டுகொள்ளவில்லை.

மற்ற விலங்குகளின் கேலிச் சிரிப்பு நிற்கவே இல்லை. "இந்தக் கழுதைக்கு நம்மைப் போல என்ன வித்தை தெரியும்?" என்று இதைக் கொஞ்சங்கூட மதிக்காமல் கேலி செய்துகொண்டே இருந்தன.

கடக்கிட்டி முடக்கிட்டி, அவற்றின் கர்வத்தை அடக்க வேண்டும் என்று சமயம் பார்த்துக்கொண்டிருந்தது.

ரிங்மாஸ்டர் வந்து, குதிரைகளையும் மற்ற விலங்குகளையும் அவற்றிற்குத் தெரிந்த வித்தைகளைக் காட்டுமாறு செய்தான். இடை இடையே சர்க்கஸ் கோமாளி வந்து, வேடிக்கை காட்டி. எல்லோரையும் சிரிப்பில் மூழ்கடித்துக் கொண்டிருந்தான். அவன் முகத்தைப் பார்த்தாலே சிரிப்பு வரும்படியாக இருந்தது.

குதிரைச்சவாரி, நாய்வண்டியில் குரங்குச் சவாரி எல்லாவற்றையும் பார்த்த மக்கள் கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். ஒரு யானை நாற்காலியில் உட்கார்ந்து, துதிக்கையைத் தூக்கி எல்லோருக்கும் வணக்கம் சொல்லிற்று. மற்றொரு யானை, பெரிய மரப்பந்து ஒன்றன் மேல் நின்று, அதை உருட்டிற்று. பார்த்தவர் கள் எல்லாம் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

சிங்கம், புலி முதலியவை பாதுகாப்பான இரும்புக்கம்பிகளுக்கு உள்ளிருந்து வித்தை

காட்டின. அவற்றின் கர்ஜனை கூடாரத்தையே தூக்கி அடிக்கும்படியாக இருந்தது. ஒருவன் சிங்கத்தின் வாய்க்குள் தன் தலையை விட்டுக் காட்டினான். மக்கள் மேலும் மேலும் கைதட்டித் தங்கள் பாராட்டைத் தெரிவித்துக்கொண் டிருந்தார்கள்.

இது முடிந்ததும் கடக்கிட்டி முடக்கிட்டி திடீரென்று வட்டத்திற்குள் புகுந்தது. அந்த மிருகங்களுக்குத் தெரியாத ஒரு வித்தையைத் தான் செய்து காட்டவேண்டும் என்று அது துடித்துக்கொண்டிருந்தது. கடக்கிட்டி முடக் கிட்டி நடக்கும்போதே பின்கால்கள் ஒன்றோ டொன்று இடித்துக்கொண்டே, 'கடக்கிட்டி முடக்கிட்டி, கடக்கிட்டி முடக்கிட்டி' என்று சத்தம் உண்டாகுமல்லவா? அது ஓடும்போது அந்தச் சத்தம் இன்னும் நன்றாகக் கேட்கும். அதையே தனது புதிய வித்தைக்கு அது பயன் படுத்திக்கொண்டது.

வட்டத்திற்குள் வந்ததும் அது சுற்றிச் சுற்றி ஓடத் தொடங்கியது. அதன் உடம்பில் இருந்த வர்ணப்பூச்சே ஒரு வேடிக்கையாக அமைந்துவிட்டது. மேலும், கடக்கிட்டி முடக் கிட்டி என்று பின்னங்கால்களில் சத்தம் எழுவதும் யாரும் இதுவரை கண்டிராத புதிய வித்தையாகத் தோன்றிற்று. இது மிக நல்ல வித்தை என்று மக்கள் தங்கள் ஆசனங்களை விட்டு எழுந்து நின்று, கைதட்டித் தங்கள் பாராட்டை வெளிப்படுத்தினார்கள்.

சர்க்கஸ் கோமாளி அதன் கழுத்தில் ஒரு முறுக்கு மாலையைப் போட்டு, அதைத் தட்டிக் கொடுத்தான். ஒரே கைதட்டல்; சிரிப்பு.

சர்க்கஸ் மிருகங்கள் எல்லாம் அதைப் பார்த்துப் பொறாமை கொண்டன. தாமும் அப்படிச் செய்து காட்ட வேண்டும் என்று வட்டத்திற்குள் நுழைந்தன.

யானை தன் பின்கால்களை ஒன்றோ டொன்று இடிக்கும்படி செய்து பார்த்து முடியாமல் தட்டுத்தடுமாறித் 'தொப்'பென்று தரையில் விழுந்தது. அதைக் கண்டு எல்லோரும் நகைத்தார்கள்.


குதிரை, நாய், குரங்கு - ஒவ்வொன்றும் அந்த வித்தையைச் செய்துபார்த்து மண்ணைக் கவ்வின.

இவற்றையெல்லாம் பார்த்து மக்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார்கள். சர்க்கஸ் மிருகங்களுக்கெல்லாம் அவமானமாய்ப் போய் விட்டது. அந்தக் கழுதையைக் கேவலமாக நினைத்ததை எண்ணி அவை வெட்கமடைந்தன; தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டன.

கடக்கிட்டி முடக்கிட்டி கம்பீரமாகத் தலையை நிமிர்த்தி நடந்து, சத்திரத்திற்கே வந்துவிட்டது. யாரும் அதைத் தடை செய்ய வில்லை. வழியில் அது தன் கழுத்தில் கோமாளி போட்ட மாலையிலிருந்து முறுக்குகளைத் தின்றுகொண்டே நடந்தது.

கிழவன் தூங்கி எழுவதற்கும், அது வருவதற்கும் சரியாக இருந்தது.

பழைய சோற்றைத் தின்றுவிட்டுக் கிழவனோடு கடக்கிட்டி முடக்கிட்டி ஒய்யாரமாகக் குடிசையை நோக்கி நடக்கலாயிற்று. அதற்கு ஒரே ஆனந்தம். அதனால் அது அடிக்கடி கத்திற்று. அன்று ஏன் அதற்கு அவ்வளவு கொண்டாட்டம் என்று கிழவனுக்கு விளங்கவே இல்லை.



# 5

## கடக்கிட்டி முடக்கிட்டியும் நான்கு திருடர்களும்

வழக்கம் போல ஒரு நாள் காட்டிலிருந்து வெட்டி வந்த விறகைக் கடக்கிட்டி முடக்கிட்டியின் முதுகில் வைத்துக் கிழவன் பட்டணத்திற்கு ஓட்டிச் சென்றான். அங்கே விறகை நான்கு ரூபாய்க்கு விற்றுவிட்டு, அந்தப் பணத்தைத் தன்னிடமுள்ள ஒரு கிழிந்த பையில் போட்டுத் தலைமாட்டில் வைத்துக்கொண்டு அலுப்புத் தீரச் சத்திரத்திலே படுத்து உறங்கலானான்.

கிழவன் தூக்கத்திலே கொஞ்சம் புரண்டு படுத்தான். தலைமாட்டில் வைத்திருந்த பை நன்றாக வெளியில் தெரிந்தது.

அந்தச் சத்திரத்திலே படுத்துத் தூங்க வருவதுபோலப் பாசாங்கு செய்துகொண்டிருந்த நான்கு திருடர்கள் இதைக் கவனித்தார்கள். உடனே மெதுவாக இந்தப் பையை எடுத்துக்கொண்டு அந்த இடத்தைவிட்டு நழுவி விட்டார்கள்.

கடக்கிட்டி முடக்கிட்டி இதைப் பார்த்துக் கொண்டே இருந்தது. அதற்குக் கோபம் கோபமாக வந்தது. இருந்தாலும் அதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கிழவனை எழுப்பிவிட்டால் திருடர்களைப் பிடிக்கமுடியும் என்று எண்ணி, அது கிழவன் பக்கத்தில் சென்று, நின்றுகொண்டு கத்திற்று.

தன் தூக்கத்தை அது கலைத்துவிட்டது என்று நினைத்துக் கிழவன் அதைத் தன் கைத் தடியால் இரண்டு அடி ஓங்கி அடித்துவிட்டு மறுபடியும் படுத்துத் தூங்கலானான். பாவம், வலி பொறுக்க முடியாமல் கடக்கிட்டி முடக்கிட்டி முனகிக்கொண்டிருந்தது. அதன் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாக வழிந்தது.

கிழவன் மாலை நான்கு மணி அளவில் தூக்கங் கலைந்து எழுந்தான். அப்பொழுது தான் அவன் தன் பையை யாரோ திருடிக் கொண்டு போய்விட்டார்கள் என்பதை அறிந்தான். கிழவன் தூங்கும்போது என்றுமே கத்தாத கழுதை அன்று எதற்காகக் கத்திற்று என்பதை அவன் தெரிந்துகொண்டு பெரிதும் விசனப்பட்டான். அதன் முதுகை மெதுவாகத்

தடவிக் கொடுத்தான். ''தெரியாமல் அடித்து விட்டேன்; வருத்தப்படாதே'' என்று அன்போடு கூறினான்.

கடக்கிட்டி முடக்கிட்டி ஆறுதல் அடைந்தது. தனக்கு அடி விழுவதற்குக் காரணமாக இருந்த அந்த நான்கு திருடர்களையும் பழி வாங்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டது.

அடுத்த ஒரு வாரத்திற்குத் திருடர்கள் நான்கு பேரும் சத்திரத்தில் தலை காட்டவில்லை. அதற்குப் பிறகு ஒரு நாள் வந்தார்கள். வழக்கம் போலப் பாசாங்கு செய்ய எண்ணி நான்கு பேரும் படுத்தார்கள். அவர்களில் இரண்டு பேர் நன்றாகத் தூங்கிவிட்டார்கள். குறட்டைச் சத்தம் பலமாகக் கேட்டது.

அந்தச் சமயத்தில்தான் கிழவன் அன்று கொண்டுவந்த விறகை விற்றுவிட்டு ஓய்வு கொள்ளுவதற்காகச் சத்திரத்திற்கு வந்தான். இப்பொழுதெல்லாம் அவன் பணத்தைத் தலை மாட்டில் வைப்பதில்லை. தன் இடுப்பு வேட்டியில் நன்றாக முடிந்து மடியில் செருகிக் கொண்டு படுத்துத் தூங்கலானான்.

கடக்கிட்டி முடக்கிட்டி, கிழவன் போட்ட பசும்புல்லைத் தின்றுகொண்டிருந்தது.

தூங்காமல் இருந்த மற்ற இரண்டு திருடர்களும் தங்களுக்குள் ஏதோ ரகசியம் பேசத் தொடங்கினார்கள்.

"அண்ணே, நம் கூட்டாளிகள் குறட்டை விடுவதைப் பார். கிழவனும் தூங்கிக்கொண்டிருக்கிறான்" என்றான் ஒரு திருடன்.

"ஆமாம், கிழவன் இப்போது சாக்கிரதையாக இருக்கிறான். இடுப்பில் உள்ள பணத்தை எடுக்க முடியாது" என்றான் மற்றவன்.

"அது கிடக்கட்டும், அண்ணே. நான் இன்னொரு பெரிய திட்டம் சொல்லுகிறேன். இந்தத் திட்டம் நம் இரண்டு பேருக்குள்ளே இருக்கட்டும். என்ன, தெரிஞ்சுதா?" என்றான் முதலில் பேசிய திருடன்.

"என்ன அப்படிப் பெரிய திட்டம்?"

"அதுதான், கிழவன் குடிசைக்குள்ளே புகுந்து திருடுவது. நம் இரண்டு பேருக்குள்ளே ரகசியமாக இருக்கட்டும்."

இந்தச் சமயத்திலே கடக்கிட்டி முடக்கிட்டி தூங்குகிற திருடர்களில் ஒருவன் காலை மெதுவாக நக்கிற்று. அவன் மறுபக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டான்; எழுந்திருக்கவில்லை. கடக்கிட்டி முடக்கிட்டி தூங்கும் மற்றொருவனுடைய காலிலும் அப்படியே செய்தது. அவன் விழித்துக்கொண்டான். விழித்தவன் அப்படியே படுத்துக்கொண்டு முதலில் கிழவனைப் பார்த்தான். பிறகு, தன் கூட்டாளிகளில் இரண்டு பேர் ரகசியமாகப் பேசுவதைக் கவனித்தான். 'என்ன அப்படி ரகசியமோ?' என்று கண்களை மூடிக்கொண்டு படுத்தபடியே உற்றுக் கேட்கலானான்.

"இந்தக் கிழவனுடைய குடிசையில் என்ன இருக்கப்போகிறது? இவனோ விறகு வெட்டிப் பிழைக்கிறவன்" என்று இரண்டாம் திருடன் சந்தேகத்தோடு கேட்டான்.

"அண்ணே, இந்தக் கிழவன் தினமும் குறைந்தது நான்கு ரூபாய்க்கு விறகு விற்கிறான். இவனுக்குச் செலவும் அதிகம் இருக்காது; அரிசி பருப்பு வாங்கத் தினமும் இவனுக்கு இரண்டு ரூபாய்க்கு மேல் செலவில்லை. அதனால், விறகு விற்றுச் சம்பாதித்த பணத்தையெல்லாம் அவன் குடிசையில் எங்காவது வைத்திருப்பான். அதை நாம் இரண்டு பேரும் சுலபமாகத் தட்டிக்கொள்ளலாம்" என்று ஆசை காட்டினான் முதலில் பேசிய திருடன்.

மற்றவனுக்கும் பணம் சுலபமாகக் கிடைக்கும் என்றவுடன் ஆசை வந்துவிட்டது.

"ஆமாம் தம்பி, இந்தக் கிழவனைச் சமாளிக்க நாம் இரண்டு பேருமே போதும். ஒரு தட்டுத் தட்டினால் கிழவன் கீழே விழுந்து விடுவான். நம் கூட்டாளிகளையும் சேர்த்துக் கொண்டால் நமக்குக் கால் பங்குதானே வரும்."

"அதனால்தான் இதை நாம் மட்டும் ரகசியமாகச் செய்ய வேண்டும். அடுத்து வரும் அமாவாசை நல்ல இருட்டாக இருக்கும். நடுச் சாமத்திலே கிழவனுடைய குடிசைக்குள் புகுந்துவிடலாம்."

இவர்கள் பேசியதையெல்லாம் விழித்துக் கொண்டு படுத்திருந்த திருடன் நன்றாகக் கேட்டுக்கொண்டான். அதை அப்படியே நான்காவது திருடனுக்குச் சொல்லிவிட்டான்.

"திருட்டுத் தொழிலிலும் இப்படி நய வஞ்சகமா?" என்று அவர்களுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. "அவர்கள் இரண்டு பேருக்கும் நல்ல புத்தி வருமாறு செய்ய வேண்டும்" என்று அவர்கள் இருவரும் ஒரு திட்டம் வகுத்துக்கொண்டார்கள்.

அதன்படி அமாவாசை இரவில் நடுச்சாமத் திற்கு முந்தியே அவர்கள் கிழவனுடைய குடிசையில் புகுந்து பதுங்கிக்கொண்டார்கள். கிழவன் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான். கடக்கிட்டி முடக்கிட்டியும் தூங்கிக்கொண்டிருந் தது.

முன்பே ஏற்பாடு செய்துகொண்டது போல் முதல் இரண்டு கூட்டாளிகளும் நடுச்சாமத்தில் குடிசைக்குள் நுழைந்தார்கள். அந்தச் சமயம் பார்த்து முன்னால் வந்த கூட்டாளிகள் அவர் கள் மேல் பாய்ந்தார்கள். இருட்டாக இருந்த தால் திடீரென்று பாய்ந்தது யாரென்று கண்டு கொள்ள முடியவில்லை.

அவர்கள் நான்கு பேர்களுக்குள்ளும் பெரிய குத்துச்சண்டை நடந்தது. இப்படி நீண்ட நேரம் ஒருவரை ஒருவர் தாக்கியதால் நான்கு பேரும் மயங்கிக் கீழே விழுந்துவிட்டார் கள்.

சண்டை நடந்த சத்தம் கேட்டுக் கிழவன் விழித்துக்கொண்டான். ஆனால், இந்தச் சண்டையில் கலந்துகொள்ளாமல் தூங்குவது போலவே படுத்துக் கிடந்தான்.

திருடர்கள் மயக்கம் போட்டு விழுந்ததைக் கண்டதும் கிழவன் எழுந்து வந்து, அவர்களுடைய கைகளையும் கால்களையும் நன்றாகக் கட்டிவிட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு வேகமாக நடந்தான்.

இதற்குள் பொழுது விடிந்துவிட்டது. நான்கு திருடர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து அவமானம் அடைந்தார்கள்.

''அண்ணே, நாங்கள் செய்தது தப்புத் தான். முதலில் இப்போது தப்பி ஓடுவதற்கு வழி தேடுவோம். பக்கத்தில் புரண்டு வந்தால் நான் மெதுவாகக் கட்டை அவிழ்த்துவிடுகிறேன். பிறகு எல்லோரும் கிழவன் வருவதற்குள் ஓடிவிடலாம்'' என்றான் ஒரு திருடன்.

''அதுதான் நல்லது'' என்று மற்றவர்களும் நினைத்தார்கள். மெதுவாக ஒருவர் பக்கத்தில் ஒருவராகப் புரண்டு வர முயற்சி செய்தார்கள்.

ஆனால் அவர்கள் முயற்சி பலிக்கவில்லை. கடக்கிட்டி முடக்கிட்டி தன் பின்னங்கால்களால் நகருகின்ற ஒவ்வொரு திருடனுடைய தலையிலும் 'படீர் படீர்' என்று உதைக்கத் தொடங்கிற்று. அதனால் திருடர்கள் மறு

படியும் மயக்கமடைந்து கிடந்தார்கள். எவனா வது ஒரு திருடன் கொஞ்சம் நினைவு வந்து அசைந்தால் உடனே அவன் பக்கத்தில் சென்று கடக்கிட்டி முடக்கிட்டி உதைக்கும். அதனால் அவர்கள் நால்வரும் போலீஸ்காரர்கள் வரும் வரையில் மயங்கியே கிடந்தார்கள்.

நான்கு திருடர்களையும் விலங்கிட்டுப் போலீஸ்காரர்கள் பிடித்துச் சென்றார்கள். கடக்கிட்டி முடக்கிட்டி மகிழ்ச்சியால் உரக்கக் கத்திற்று. கிழவன் அதைக் கட்டி அணைத்துக் கொண்டான்.



# 6

## கடக்கிட்டி முடக்கிட்டியும் காட்டுவிலங்குகளும்

முயல் எப்பொழுதுமே பயந்த இயல்புடையது. அதன் பெரிய காதுகளின் .உதவியைக் கொண்டு சின்னச் சத்தத்தையும் கண்டு பிடித்துவிடும். அப்படிச் சத்தம் கேட்டால் உடனே தாவி ஓடிப் புதருக்குள் பதுங்கிக் கொள்ளும்.

இந்தக் கோழை முயல்களையெல்லாம் தோற்கடிக்கச் செய்யும்படியாக அவ்வளவு பெரிய கோழை முயற்குட்டி ஒன்று இருந்தது. சிறிய ஒலியைக் கேட்டாலும் ‘விறுக்கு விறுக்கு’ என்று நடுங்கும்; தாவித்தாவி ஓடிவிடும்.

ஒரு நாள் இந்த முயற்குட்டி காட்டிலே மற்ற முயல்களோடு சேர்ந்து ஓரிடத்தில் புல் மேய்ந்துகொண்டிருந்தது. அப்பொழுது வானத்திலே கருமையான மேகங்கள் எங்கும் பரவின. மின்னல் 'பளீர் பளீர்' என்று மின்னத் தொடங்கியது. திடீரென்று ஒரு பெரிய இடி முழக்கம் பூமியே அதிரும்படி கேட்டது.

அதைக் கேட்டதும் முயற்குட்டி "ஐயோ, பூமி கீழே விழுகிறது; கீழே விழுகிறது" என்று சத்தமிட்டுக்கொண்டு தாவித்தாவி ஓடத் தொடங்கிற்று. அது போடுகின்ற சத்தத் தைக் கேட்டு மற்ற முயல்களும் நடுங்கலாயின. "பூமி கீழே விழுகிறது" என்று அவைகளும் கத்திக்கொண்டு முயற்குட்டியின் பின்னால் தாவித் தாவி ஓடின.

ஓரிடத்தில் மான்கள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. முயல்களின் கூக்குரலைக் கேட்டு அவைகளும், "பூமி பாதாளத்தில் விழு கிறது" என்று கத்திக்கொண்டு முயல்களின் பின்னாலேயே ஓடத் தொடங்கின.

கரடிகள் மற்றோரிடத்திலே ஏதோ தமக்குள் பேசிக்கொண்டிருந்தன. அவைகளும் பயந்து "பூமி விழுகிறது; பூமி விழுகிறது" என்று கூவிக்கொண்டே மான்களைத் தொடர்ந்து ஓட்டம் பிடித்தன.

சிறுத்தைகளும் புலிகளும் நன்றாக இருட் டான பிறகு இரைதேடச் செல்லுவதற்காக அவற்றின் குகைகளில் பதுங்கி இருந்தன.

அவைகளும் முயல், மான், கரடி ஆகியவை போடும் பெரிய இரைச்சலைக் கேட்டன. 'ஆபத்து ஏதாவது இல்லாவிட்டால் இத்தனை விலங்குகளும் ஓடுமா' என்று சிறுத்தைகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது. புலிகளுக்கும் அவ்வாறே சந்தேகம் உண்டாயிற்று. அதனால் அவை களும் கூட்டத்திலே சேர்ந்துகொண்டு பாய்ந்து பாய்ந்து ஓடத் தொடங்கின.

இப்படி இந்த விலங்குகளெல்லாம் அஞ்சி நடுங்கிக் காட்டைச் சுற்றிச் சுற்றிப் பல தடவை ஓடிக்கொண்டிருந்தன. கடக்கிட்டி முடக்கிட்டி அப்பொழுதுதான் பட்டணத்திலிருந்து திரும்பி வந்திருந்தது. பசும் புல் மேய்வதற்காக வெளியே வந்தபோது, அது இந்த விலங்கு களின் ஓட்டத்தைக் கவனித்தது.

விலங்குகளின் முன் அணியில் ஓடிவந்த முயல்களைப் பார்த்துக் கடக்கிட்டி முடக்கிட்டி, "முயல்களே, ஏன் இப்படி ஓடுகிறீர்கள் ? பயப் படாமல் கொஞ்சம் நின்று பதில் சொல்லுங் கள்" என்று நிதானமாகக் கேட்டது.

"ஐயோ, பூமி கீழே விழுகிறது. நாங்கள் ஓட்டம் பிடிக்கிறோம்" என்று கூறிவிட்டுக் கொஞ்ச நேரமும் நிற்காமல் முயல்கள் ஓடத் தொடங்கின. அவற்றைத் தொடர்ந்து மற்ற விலங்குகளும் "பூமி விழுகிறது, பூமி விழு கிறது" என்று கூவிக்கொண்டே ஓடின.

மறுபடியும் அந்த விலங்குகள் ஒரு சுற்று வருவதற்குள் கடக்கிட்டி முடக்கிட்டி நிதான

மாக எண்ணமிட்டது. அவை பயப்படுவதன் காரணத்தையும் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தது.

அதற்குள் முயல்கள் திரும்பவும் வந்துவிட்டன. "முயல்களே, நீங்கள் இப்படி ஓடினால் காட்டைச் சுற்றிச் சுற்றித்தானே வரமுடியும்? புதிதாக எங்காவது தப்பி ஓட முடியுமா? நான் சொல்லுவதை நிதானமாகக் கேளுங்கள்" என்று உரத்த சத்தத்தில் கத்திற்று.

அதைக் கேட்டுக்கொண்டே முயல்களும் மற்ற விலங்குகளும் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருந்தன. இப்படி அவை மேலும் நான்கு முறைசுற்றி வந்துவிட்டன. ஒவ்வொரு தடவையும் கடக்கிட்டி முடக்கிட்டி, "நில்லுங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று முழங்கிக் கொண்டே இருந்தது.

ஐந்தாவது தடவையாக முயல்கள் ஓடி வரும்போதுதான், கடக்கிட்டி முடக்கிட்டி ஒரே இடத்தில் யாதொரு தீங்குமில்லாமல் நிற்பதை அவை உணரத் தொடங்கின. அதனால் முயல்கள் தைரியமடைந்து, கொஞ்ச நேரம் நின்று, அதன் பேச்சைக் காதுகொடுத்துக் கேட்க நினைத்தன. அவைகளுக்கு ஓடி ஓடிக் களைப்பும் அதிகமாகிவிட்டது.

"எங்கே ஓடுகிறீர்கள்?" என்று கடக்கிட்டி முடக்கிட்டி முயல்களைப் பார்த்துக் கேட்டது.

"பூமி கீழே விழுகிறது! நாங்கள் தப்பிப் பிழைக்க ஓடுகிறோம்" என்று முயல்கள் பதில் அளித்தன.

"ஆமாம், தப்பிப் பிழைக்கவேண்டுமானால் இந்தக்காட்டைவிட்டுவேறுஎங்காவது ஓட வேண்டும். இந்தக் காட்டைச் சுற்றிச் சுற்றித்தானே நீங்கள் ஓடுகிறீர்கள்? அப்படிச் செய்தால் தப்பிப் பிழைக்க முடியுமா?"

இதற்குள் மற்ற விலங்குகளும் அங்கே வந்து கூடிவிட்டன. அவைகளும் கடக்கிட்டி முடக்கிட்டியின் பேச்சைக் கவனமாகக் கேட்கத் தொடங்கின.

"ஐந்து முறை நீங்கள் சுற்றிச்சுற்றி ஓடியதை நான் இந்த இடத்திலேயே நின்று கொண்டு பார்த்தேன். நான் உங்களைப் போல ஓடவில்லை. எனக்கு ஒன்றும் தீங்கு வரவில்லையே! எதற்காக இப்படிப் பயப்பட்டு ஓடத் தொடங்கினீர்கள்?" என்று கடக்கிட்டி முடக்கிட்டி மறுபடியும் கேட்டது.

"அதென்னவோ, பூமி கீழே விழுகிறதாகக் கரடிகள் சொல்லித்தான் நாங்கள் ஓடத் தொடங்கினோம்" என்று சிறுத்தைகளும் புலிகளும் பதில் தெரிவித்தன.

"எங்களுக்குத் தெரியாது. மான்கள் சொல்லித்தான் நாங்கள் ஓடுகிறோம்" என்றன கரடிகள்.

"எங்களுக்கும் தெரியாது. முயல்கள் சொல்லித்தான் நாங்கள் ஓடுகிறோம்" என்றன மான்கள்.

"எங்களுக்கும் தெரியாது. அதோ அந்தச் சின்ன முயற்குட்டிதான் முதலில் அப்படிக் கத்திற்று" என்று மற்ற முயல்கள் கூறின.

குட்டிமுயல், "நான் ஒரு பெரிய சத்தத்தைக் கேட்டேன், அதனால் பயந்து பூமி விழுவதாக நினைத்தேன்" என்றது.

அந்தச் சமயத்தில் மறுபடியும் ஒரு பலத்த இடிமுழக்கம் கேட்டது.

"ஐயோ, பூமி விழுகிறது" என்று அலறிற்று குட்டிமுயல்.

"பார்த்தீர்களா! இந்த இடியோசையை நாம் எல்லோரும் பல முறை கேட்டிருக்கிறோம். இதனால் பூமி எங்கும் விழுந்துவிடாது. இந்தக் குட்டிமுயல் பிறந்ததுமுதல் இடியோசையைக் கேட்டதில்லை போலிருக்கிறது. அதனால்தான் பயந்திருக்கிறது. பூமி எங்கேயும் விழுந்து விடாது. யாருமே அஞ்ச வேண்டா" என்று கடக்கிட்டி முடக்கிட்டி கம்பீரமாகச் சொல்லிற்று.

உடனே காட்டுவிலங்குகளின் பயம் நீங்கியது. அதனால் அவை கடக்கிட்டி முடக்கிட்டியிடம் அளவில்லாத அன்பு கொண்டன. "நீங்கள்தான் எங்களைக் காப்பாற்றினீர்கள். இல்லாவிட்டால் நாங்கள் ஓடி ஓடியே உயிரை

விட்டிருப்போம். இப்பொழுதே எங்களுக்குப் பாதி உயிர் போய்விட்டது. நல்ல வேளையாக நீங்கள் உண்மையை எடுத்துச் சொன்னீர்கள்'' என்று கூறி, அவைகள் கடக்கிட்டி முடக்கிட்டியிடம் நிறைந்த அன்பும் மரியாதையும் காட்டின.

அத்துடன், ''நீங்கள் காட்டிற்குள்ளே எங்கு வேண்டுமானாலும் வந்து பசும்புல் மேயலாம். நீங்கள் அப்படி வருவதை நாங்கள் ஒரு பெருமையாக எண்ணுவோம்'' என்று எல்லா விலங்குகளும் ஒரே மூச்சில் முழங்கின.

கடக்கிட்டி முடக்கிட்டி அன்று முதல் காட்டிற்குள் புகுந்து, அச்சமில்லாமல் பசும்புல் மேய்ந்து, நன்றாகக் கொழுத்து வளர்ந்தது. அப்படி மேயும்போது இடையிடையே காட்டுவிலங்குகளில் சில அதனுடன் பேச்சுக் கொடுக்க ஆவலுடன் வரும். அவற்றோடு பேசிக் கொண்டே கடக்கிட்டி முடக்கிட்டி மேயும்.

நன்றாகக் கொழுத்து வளர்ந்துவிட்டதால் கடக்கிட்டி முடக்கிட்டிக்கு இப்பொழுதெல்லாம் விறகு சுமப்பதுகூட எளிதாக முடிந்தது.